இந்து சமய அறநிலையத்துறை

**அனுப்புநர்:**
ஆணையர்,
சென்னை – 34.

**பெறுநர்:**
இணை ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
தஞ்சாவூர். (ஒப்புகை அஞ்சலில்)

R3419891 01A
M3 34 1.12.22

2 - DEC 2022
3017

**ந.க.எண்.66393/2017/பி3, நாள்.29.11.2022**

**பொருள்:** பணிப்பிரிவு – இந்து சமய அறநிலையத்துறை – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.இரா.சுப்பிரமணியன், இளநிலை உதவியாளர் – இணை ஆணையர் அலுவலகம் தஞ்சாவூர் – பணிவரன்முறை செய்யப்பட்டது – விவரம் தெரிவித்தல் – தொடர்பாக.

**பார்வை:** அரசாணை (3ப)எண்.14 சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள்.22.11.2022

2.12.22

******

இத்துறையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்று தஞ்சாவூர் இணை ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 25.07.2018 முற்பகல் முதல் பணிபுரியும் திரு.இரா.சுப்பிரமணியன், இளநிலை உதவியாளருக்கு பார்வையில் காணும் அரசாணையில் அன்னார் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை தனியரிடம் சார்வு செய்யும் பொருட்டு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

மேலும் தனியர், அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்த பின்னர் அன்னாருக்கு தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்வது தொடர்பாக அறிக்கையினை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு:** அரசாணை

ஒம்/–இரா.கண்ணன்
கூடுதல் ஆணையர் (நிர்வாகம்)
(ஆணையருக்காக)

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

30/11/22
கண்காணிப்பாளர்

நகல்

30/11/2022

1. திரு.இரா.சுப்பிரமணியன்,
   இளநிலை உதவியாளர்,
   இணை ஆணையர் அலுவலகம்,
   தஞ்சாவூர்.
2. மிகை.

சுருக்கம்

பொதுப்பணிகள் – இந்து சமய அறநிலையத்துறை – கருணையடிப்படையில் பணி நியமனம் – திரு.இரா.சுப்ரமணியன், இளநிலை உதவியாளர், இணை ஆணையர் அலுவலகம், தஞ்சாவூர் – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி 2–1) துறை

அரசாணை (3ப) எண்.14

நாள்: 22.11.2022
சுபகிருது, கார்த்திகை–6
திருவள்ளுவர் ஆண்டு–2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.23.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.26.02.2021.
3. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடித ந. க. எண்.66396/2017/பி3, நாள்.20.09.2022.

******

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையிலான பணிநியமனம் வழங்குவது குறித்து விரிவான வழிகாட்டு நெறிமுறைகள்(Guidelines) வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை உள்ள கருணையடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வது குறித்து வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடிதத்தில், இந்து சமய அறநிலையத்துறையில், தஞ்சாவூர், உதவி

ஆணையர் அலுவலகத்துடன் இணைந்த திருக்காட்டுப்பள்ளி ஆய்வராக பணிபுரிந்த திரு.கே.பி.ராஜேந்திரன் அவர்கள் 17.06.2017 அன்று பணியில் இருக்கும்போது இயற்கை எய்தியுள்ளார் எனவும், மறைந்த அரசு ஊழியர் மகனான திரு.இரா.சுப்ரமணியன் என்பவர் 29.11.2017 நாளிட்ட விண்ணப்பத்தில் தனக்கு கருணை அடிப்படையில் பணி வேண்டியதன்பேரில் ஆணையரது செ.மு.ந.க. எண்.67123 / 2016 / பி3, நாள்.13.07.2018–ல் தஞ்சாவூர் இணை ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு 25.07.2018 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் எனவும், திரு.இரா.சுப்ரமணியன் அவர்கள் கருணை அடிப்படையில் பணிவேண்டி விண்ணப்பிக்கும்போது இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்கு தேவையான கல்வித்தகுதி மற்றும் வயதுத்தகுதி பெற்றிருந்தார் எனவும், கருணை அடிப்படையில் பணி வேண்டி மூன்றாண்டுகளுக்குள் விண்ணப்பம் அளித்துள்ளார் எனவும், எனவே, திரு.இரா.சுப்ரமணியன் என்பவர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 25.07.2018 முற்பகல் முதல் அவரது பணியினை வரன்முறை செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் கருத்துருவினை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர் அதனை ஏற்று, இந்து சமய அறநிலையத்துறையில், தஞ்சாவூர் இணை ஆணையர் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்துவரும் திரு.இரா.சுப்ரமணியன் என்பவரின் பணியினை அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாளான 25.07.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வரசாணை தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அலுவல் சாரா்பற்ற எண்.17368/க்யூ–1/2022, நாள்.04.11.2022 மற்றும் மனித வள மேலாண்மைத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.3512560/ஜி2/2022, நாள்.16.11.2022–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தர மோகன். B
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

திரு.இரா.சுப்ரமணியன், இளநிலை உதவியாளர்,
இணை ஆணையர் அலுவலகம், தஞ்சாவூர்.
<u>(ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை வழியாக)</u>
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34.

நகல்:-

கருவூல கணக்கு அலுவலர், தஞ்சாவூர்.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை-9
மனித வள மேலாண்மைத்துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

22/11/2022
பிரிவு அலுவலர்

22/11/22